## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 123/2020.

Prosecution witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.ராமர் | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.08.2025.

A1 and 2 present.

முதல் விசாரணை

நான் தற்போது குருவிக்குளத்தில் குடியிருந்து தொலைக்காட்சி பெட்டிகளை பழுது பார்க்கும் கடை நடத்தி வருகிறேன். இறந்து போன ராமநாதன் என் மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். 2ம் எதிரி ராமநாதனின் மனைவி. என் மருமகள். என் மகன் சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் மகனும் 2ம் எதிரியும் சண்டை போட்டு கொண்டு இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள். ஆஜர் எதிரிகள்தான் என் மகனை கொன்றுவிட்டார்கள். என் மகன் கோவையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். கல்லூாரணியில் என் மகன் இறந்து கிடந்ததை பார்த்தேன். என் மகனுக்கு கை, வாயின் வலது பக்க ஓரத்திலும் காயங்கள் இருந்தது. உடல் காயங்களுடன் இருந்தது. என்ன காரணத்திற்காக என் மகனை கொன்றார்கள் என்றால் 2ம் எதிரிக்கும் என் மகனுக்கும் பிரச்சனை எனக்கு வேறு எதுவும் தெரியாது. 1ம் எதிரி எப்போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு வருவார் என்றால் அவர் எங்கள் வீட்டிற்கு வரமாட்டார். என் மகன் இறந்தது சம்மந்தமாக போலிசில் நான் கொடுத்த புகார் அ.சா.ஆ–1. போலிசார் என் மகன் பிரேதம் இருந்த இடத்தில் பிரேத விசாரணை செய்யும் போது நானும் உடன் இருந்தேன். போலிசார் சம்பவ

இடத்தில் என்ன கண்டெடுத்தார்கள் என்றால் ஞாபகமில்லை. எனக்கு ஞாபகமறதி உண்டு. என்னால் சரியாக நடக்க முடியாது. நான் நீதிமன்றத்திற்கு காரில் வந்தேன். 1ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் தொடர்பு இருந்தது.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிஸ் விசாரணையில்

1ம் எதிரிக்கும் 2ம் எதிரிக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததால் அதை நான் பார்த்து விட்டதால் அது குறித்து என் மகன் ராமநாதனுக்கு நான் சொல்ல என் மகன் ராமநாதன் 1,2 எதிரிகளை கண்டித்ததால் அவருக்கு இடையூறாக இருந்த என் மகனை திட்டம் போட்டு எதிரிகள் கொலை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

என் மகன் எப்போது கோவையில் இருந்து வருவதாக சொன்னால் என்றால் எனக்கு தெரியாது. அது குறித்து அவர் என் மனைவியிடம் சொன்னார். திருமணம் முடிந்து 1 மாதத்தில் இருந்தே 2ம் எதிரிக்கும் என் மகனுக்கும் சண்டை என்றால் எனக்கு தெரியாது. 2ம் எதிரியும் என் மகனும் விரும்பி திருமணம் செய்து கொண்டார்கள். 2ம் எதிரியும் என் மகனும் உள்ளூரில் இருந்த தீப்பெட்டி அலுவலகத்தில் வேலை செய்து வந்தார்கள். என் மகன் சங்கரன்கோவிலில் உள்ள ஒரு ஆலையில் வேலை செய்து வந்தார். என் மகன் வருவதாக சொன்ன தேதியில் இருந்து 1 வாரம் கழித்து அவர் இறந்து கிடந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. போலிசார் சொல்லி எனக்கு தெரியும். அவர்கள் தான் என்னை என் மகன் இறந்து கிடந்த இடத்திற்கு அழைத்து வந்தார்கள். என் மகனின் முகத்தை பார்த்து எனக்கு அடையாளம் தெரியவில்லை. போலிசார் சொன்னதை வைத்து என் மகன் என்று சொன்னேன் என்றால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து என் மகன் பிரேதம் இருந்த இடம் சுமார் 15 கி.மீ தூரம் இருந்தது.

காலை சுமார் 8 மணியளவில் போலிசார் என்னை அழைத்து சென்றார்கள். இறந்து போன நபர் என் மகன் தான் என்பதை அவரது அடையாள அட்டையை வைத்து போலிசார் சொன்னார்கள். அந்த அடையாள அட்டையை வைத்து தான் இறந்து போன நபர் என் மகன் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். காலை 10 மணியளவில் என் மகன் பிரேதம் இருந்த இடத்திற்கு வந்தோம். அப்போது 2ம் எதிரியும் தனியாக ஒரு வாகனத்தில் அங்கு வந்தார். 2ம் எதிரியையும் போலிசார்தான் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் அங்கு போகும் போது சுமார் 20,30 பேர் இருந்தார்கள். என்னுடன் என் வீட்டில் இருந்து யாரும் வரவில்லை. என் ஊர்காரர்கள் யாரும் என்னுடன் வந்ததாக தெரியவில்லை. 1ம் எதிரியை தெரியும். அவரை முன்பே பார்த்துள்ளேன். எங்கள் ஊரும் அத்திபட்டியும் அருகருகே உள்ள கிராமங்கள். 1ம் எதிரியை எங்கள் ஊர் வழியாக அவர் செல்லும்போதும் வரும்போதும் பார்த்துள்ளேன். என் மகனும் 2ம் எதிரியும் எங்களுடன் சேர்ந்து இருந்ததில்லை. தனியாக இருந்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என் மகன் பிரேதம் இருந்த இடத்தில் மதியம் வரையில் இருந்தோம். பிரேதத்தை கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். பிரேத பரிசோதனை முடித்து அன்று இரவே பிரேதத்தை கொடுத்துவிட்டார்கள். என் மகனின் இறுதி காரியத்தில் 2ம் எதிரி கலந்து கொண்டாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் மகன் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வராததால் அவரை கைப்பேசியில் தொடர்பு கொண்டு ஏன் வரவில்லை என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. போலிசில் நான் புகார் கொடுக்கவில்லை. யாரிடமாவது நான் தகவல் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. என் மகன் திருமணமான காலத்தில் இருந்து எங்கள் ஊர் தீப்பெட்டி அலுவலகத்தில் வேலை செய்து வந்தார் என்றால் கட்டை எடுத்து போடும் வேலை செய்தார். எங்கள் ஊருக்கும் என் மகன் இறந்து கிடந்த ஊருக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். நான் என் மகனுடன் ஆரம்பத்தில் விரோதமாக இருந்தேன் என்றால் துப்பரவாக விரோதம் என்று சொல்ல முடியாது பேச்சுவார்த்தை இருந்தது. நான் குருவிக்குளத்தில் டிவி மெக்கானிக் கடை வைத்திருந்தேன். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. 2ம்எதிரி தற்போதும் தன் பெற்றோருடன் எங்கள் ஊரில் தான் குடியிருக்கிறார். 1ம் எதிரியை எங்கள் ஊர் வழியாக போக வர

பார்த்துள்ளேன். 2ம் எதிரிக்கும் என் மகனுக்கும் இருந்த கருத்துவேறுபாடு காரணமாக கற்பனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தில் ஆஜர் எதிரிகளை தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் போலிசார் சொல்லி கொடுத்ததிற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இறந்து போன நபர் என் மகனா என்பதே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.08.28 17:26:52 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.